**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC. 962/2022**

**Prosecution Witness : 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : சாகுல் ஹமீது | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused absent.PFA)

**31.01.2024**

**முதல் விசாரணை**

நான் திருமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பூக்கடையில் பணி செய்து வருகிறேன். எனக்கு வழக்கு சம்பவம் பற்றி தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் கு.வி.**

நான் போலிசார் விசாரணையின் போது கடந்த 09.10.2011 அன்று காலை 9.00 மணிக்கு திருமங்கலம் பேருந்து நிலையத்தில் பேருந்து எண் 49 எம் என்ற பேருந்தின் அ.சா.1 முருகன் அவரது கைப்பையை ஒரு காலுக்கு அடியில் வைத்திருந்ததை எதிரி பாண்டிதுரை திருடியதை பார்த்து சத்தம் போட்ட போது எதிரி தனது முதுகில் வைத்திருந்த அருவாளால் அ.சா.1 ஐ மிரட்டி அவரது பையில் இருந்த 5 பவுன் தங்க செயின் மற்றும் பணம் ரூ.7000/- ஐ வழிப்பறி செய்து அங்குள்ளவர்களை மிரட்டி சென்றார் என போலிசார் விசாரணயில் கூறிவிட்டு தற்போது மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் கு.வி. இல்லை**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC. 962/2022**

**Prosecution Witness : 4**

| | | | |
|---|---|---|---|
| Name | : பால்ராஜ் | Caste | : |
| Father‘s Name | : பெருமாள் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused absent.PFA)
**31.01.2024**
**முதல் விசாரணை**

நான் திருமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கிராம நிர்வாக அதிகாரியாக பணி செய்து பணி ஓய்வு பெற்றேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். கடந்த 09.10.2011 அன்று திருமங்கலம் நகர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளர் அழைத்ததின் பேரில் நானும் கிராம உதவியாளர் சோலை மலை என்பவரும் மதியம் 2.00 மணியளவில் நகர் காவல் நிலையம் சென்றோம். சம்பவத்தின் போது நான் திருமங்கலத்தில் கிராம நிர்வாக அதிகாரியாக பணி செய்து வந்தேன். அங்கு குற்ற எண். 156 என்ற வழக்கு தொடர்பாக எதிரி பாண்டிதுரை என்பவரை ஆய்வாளர் அடையாளம் காண்பித்து அந்த வழக்கு சம்பந்தமாக எங்கள் முன்னிலையில் விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார். அதில் நானும் சோலைமலையும் கையெழுத்து போட்டோம். எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தில் சொன்னதின் படி அதே நாள் மாலை 4.30 மணிக்கு பழுங்காநத்தம் மாடக்குளம் ரோட்டில் உள்ள நகைக்கடை முன்பு சுரேஷ் என்பவரை அடையாளம் காட்டினார். சுரேஷ் என்பவர் ஒப்படைத்த தாலி செயின், கவர்னர் மாலை, தங்க மோதிரம் , தங்க காசு மற்றும் தங்கத்திலான பொருள் நினைவு இல்லை. மொத்தம் 5 பவுன் தங்க நகைகளை ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார். அதில் நானும் சோலைமலையும் கையெழுத்து போட்டோம். எதிரி பாண்டிதுரையை நான் பார்த்தால் அடையாளம் காட்டுவேன். எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 2 அத்தாட்சி அ.சா.ஆ. 3 ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் கு.வி.**

என் விசாரணையின் போது எதிரி ஆயுதங்கள் எதையும் ஆய்வாளரிடம் ஆஜர்படுத்தவில்லை என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் எதிரிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட நகைகள் மொத்தம் 5 பவுன் என்று தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். திருமங்கலம் நகரில் நான் 9 வருடங்களாக கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்துள்ளேன். நான் பணிபுரிந்த காலகட்டங்களில் சுமார் 50 வழக்குகள் திருமங்கலம் நகர் காவல் நிலைய வழக்குகளில் ஒப்புதல் வாக்குமூல சாட்சியாக காட்டப்பட்டுள்ளளேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக எந்த வழக்கு சொத்துக்களையும் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் திருமங்கலம் நகர் காவல் நிலையத்தில் கையிருப்பு சாட்சி என்றும் காவலர்களுக்கு கட்டுப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.